ஷரீஹத்துலக்கம் பித அத்விலக்கம்

என்னும்.

பறுலுமாலை.

முஹம்மதிய நேசன் அச்சுயந்திர
சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு. 1931. காப்பி 1000.

காப்பி ரைட் ரிஜிஸ்டர்.

விலை அணா 3

9-OCT 1931

Q7:21
N31
113636

9 - OCT 1931
MADRAS

ஷரீஹத் துலக்கம் பிதஹத்விளக்கம் என்னும்.

பறுஷமாலை.

இஃது.

ஜனாப், மௌலானா மௌல்வி,

மதார் ஸாஹிபு ஆலிம்.

அவர்களால் பாடியது.

பள்ளபட்டி.

கோ. கி. கிதர்முஹம்மது றவுத்தரும்.

மௌல்வி,

அ. முஹம்மது உசேன் ஸாஹிபு

இவர்களால் ஸஹிபார்த்து.

ஜ. மு. முஹம்மது யாக்கூப் ஸாஹிபு.

அவர்களாற்றமது.

முஹம்...

விளம்பரம்:

இதனால் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், **ஷரீஹத் துலக்கம் பிதஅத்விலக்கம் என்னும் பறுலுமாலை.** என்றஇக்கிரந்தம் 1867 ௵ (25-வது) ஆக்டின் (20-வது) பிரிவில் (6-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராஸிலும்.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட்ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது இதைவேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது இதில் ஏதேனும்சில பாகத்தையாவது, என் உத்திரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல்செய்யப்படும்.

இப்படிக்கு.

ஐ. மு. முஹம்மது யாக்கூப் ஸாஹிபு

பிரிண்டிங் ஆபீஸ், பள்ளபட்டி.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஷரீஹத்துலக்கம் பிதஅத்விலக்கம் என்னும்

பறுலுமாலை.

முகவுரை.

புகளடங்கலும் வலுப்பமான உபகாரியாகிய ரஹீம், ரஹ்மானென்னும் அல்லாஹுத்த ஆலாவுக்கா யிருக்கும் இன்னும் அவனுடைய சலவாத்தும் சலாமும் நமதுநாயகம் யாவர்களுக்குந் தாயகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா அஹமது முஜ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பேரிலும் அவர்கள் கிலையார் தோளமார்கள் பேரிலும் உண்டாவதாகவும்.

ஹிஜ்ரி 1172 ஞு ரஜபு மீ ஜனப் மௌலானா மௌல்வி மதார் ஸாஹிபு அவர்களால் அரபி, பார்ஸி, கித்தாபுகளிலிருந்து அவசியமான பிக்ஹுகளை சேகரஞ்செய்து யாவர்களுக்கும் விளங்கும்படி ஏட்டுப்பிரதியில் எழுதிஇருந்ததை பலர் பலவாரு கூட்டியுங் குறைத்தும் எழுதப்பட்டு சிதநுண்டிருந்ததை பள்ளபட்டி மகா-ா-ா-ஸ்ரீ கொ. கி. கிதர்முஹம்து ராவுத்தர் அவர்களால் சீர்திருத்தி புதிதாக சிலபாடல்களும் சேர்த்து பிக்ஹுடைய மஸ்அலாவுக்கு மௌல்வி அ. முஹம்மது உசேன் ஆலீம் ஸாஹிபு அவர்களால் பார்வையிட்டு சுத்தமாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

முகவுரை.

ஷை பறுனுமாலையில் அரபிவாக்கியம் கலந்துவருவதால் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலும் சிலதுகூடியுங் குறைந்தும் எழுத்துகள் மாறியுமிருப்பதால்,

பாலதனைப் பாச்சியெனச் சோரதனைச்
சோச்சியெனப் பாலர்நாவால், சிலமொடு
மழலைமொழி மிழற்றிடினும் பெரி
யோர்கள் சினங்கொள்வாரோ.

என்னும் பழமொழிக்கிணங்க வாசிக்கும் கனவான்கள் குற்றம்பாராட்டாது கிருபையுடன் தாங்களும் படித்து தங்கள் குழந்தைகளுக்கும் படிப்பித்துக் கொடுத்து அதன் படி நல் அமல் செய்வதுடன் இதைக்கோர்வை செய்தவர்சீர் திருத்தித் தந்தவர்கள் யாவர்களுக்கும் துவாச்செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆமீன்.

இங்கனம்.

☞ ஜ. மு. முஹம்மது யாக்கூப் ஸாஹிபு.

பறுலுமாலை விஷய அட்டவணை.

பக்கம்.		பாட்டு.
1	அல்லாவின் துதி இரசூலுல்லா (புகழ்ச்சி)	1
	ஙாலியார்கள் (புகழ்ச்சி) ...	2
2	அன்பியாக்கள் அவுலியாக்கள் (புகழ்ச்சி)	3
	நூன்முகம் ...	4
3	அல்லாவையறிவது ...	8
	இரசூலுல்லாவை யறியும்வகை ...	9
	ஈமான்நிலமை ...	11
4	இசுலாத்தின்வகை ...	12
	தன்னையரியும்வகை ...	13
	நூற்றிமுப்பது பறுலு ...	15
5	ஈமானில் பறுலு ...	17
6	இசுலாத்தில் பறுலு ...	20
	ஈமானில் வாஜிபு ...	22
7	ஷரீஹத்தில் வாஜிபு ...	25
	ஷரீஹத்தில் சுன்னத்து ...	26
	தாய்தகப்பனுக்கு கிதுமத்து ...	27
	ஈமானில் நீதி ...	28
8	ஈமானில் நெரி ...	29
	அருப்பில் பறுலு ...	31
9	அருப்பில் சுன்னத்து ...	32
	அருப்பில் முஸ்தஹப்பு ...	33
	நரம்பின் பெயர் ...	34

10	உண்ணும் ஒழுங்கு	...	37
	தண்ணீர் குடிக்கும் ஒழுங்கு	...	38
11	ஆடையுடுக்கும் வகை	...	41
	சயனஞ்செய்யாத்தலம்	...	43
	பேசாத்தலம்	...	44
12	இரசூலுல்லா தலைமுறை	...	46
	மதஹபு நாலின்விபரம்	...	47
	ஒழுவில் பறுலு	...	48
	ஷை சுன்னத்து	...	49
13	ஷை முஸ்தஹப்பு	...	51
	ஷை நபில்	...	52
	ஷை முறிச்சல்	...	53
14	பறுலான முழுக்கு	...	57
	வாஜிபான முழுக்கு	...	58
	சுன்னத்தான முழுக்கு	...	59
	முஸ்தஹபான முழுக்கு	...	60
15	முழுக்கில் பறுழு	...	61
16	ஷை சுன்னத்து	...	62
	தயமத்தின் பறுலு	...	63
	ஷை சுன்னத்து	...	64
17	மோஷாவில் மசகுசெய்வதின் பறுலு		66
	ஹய்ளின் விபரம்	...	67
18	தொழுகையின் பறுலு விபரம்	...	72
19	தொழுகையின் வெளிப்பறுலு	...	74
	தொழுகையின் உட்பறுலு	...	76

19	ஷை தொழுகையின் வாஜிபு	—	78
21	ஷை சுன்னத்து	—	84
23	ஷை முஸ்தஹப்பு	—	91
24	பொதுவான முபாஹ்	—	97
25	தொழுகையின் ஹறாம்	—	100
26	ஷை மக்ரூஹ்	—	104
29	ஷை முறிச்சல்	—	116
	நோம்பின் பறுலு	—	121
	ஷை சுன்னத்து	—	122
	ஷை முஸ்தஹப்பு	—	123
	ஷை மக்ரூஹ்	—	125
32	ஷை ஹறாம்	—	126
	ஷை முறிச்சல்	—	128
35	ஷை நோன்பின் ஹறாம்	—	130
	துஆ	—	131
36	சிரிய நகசு	—	1
	பெரிய நகசு	—	3
37	கொடிய நகசு	—	7

முற்றிற்று.

ஷரீஹத் துலக்கம் பிதஅத் விலக்கம் என்னும்,

பறுலுமாலை.

காப்பு.

சீர்பெரு மாதிதூதர் சிரந்த நன்னபி ஷபாஹத்தும்
பேர்பெரும் பொருள் கைகூடும் பெரியவனுதவியுண்டாம்
ஏர்பெரும் பறுலுமாலை யிசுலாத்தி னொழுங்கெயெல்லாம்
நேர்பெர யானுங்கூற நித்தனே துணைச்செய்வாயே.

தொங்கல்.

நீதிபிசுமில்லா ஹிற்ரஹமானிற்றஹீம் துய்யவல்லவனே, ஒதிப்
புகழுவே லாயிலாஹா இல்லல்லாவெனு மொருபொருளே.
சோதியருள் கொண்ட நவமணியே துய்யமுஹம்மது முஸ்த
பாவே, வேதம்விளங்கிய நல்விளக்கே வேதாம்பர்நபி யார
சூலே. 1

இல்லல்லாவெனு மிணையிலாத யேகபெரியோனே யென்பி
ரானே, தொல்லையணுகாத நவமனியே துய்யமுஹம்மதுமுஸ்
தபாவே, நல்லஅபூபக்க ருமுருதுமா னுயனலிப்புலி யசனு
சைனுர், வல்லமுருசலீன்ஸஹாபாக்களை வணங்கி யனுதினம்
புகழுவோமே. 2

வெற்றியுடன் துய்ய அன்பியாக்கள் வேதவுலமாக்களவுலியாக்
கள், சுத்தமுடன்பீரு ஒஸ்தாதையும் துய்யவணக்கத்தைநிரப்
பமாக்கும், எத்தும்பலனுள்ள சாலிஹானோர் இசுலாம்நெரியு
ள்ள மூமினானோர், பத்தமரவாம இவர்கள் பாதம் பணிந்து
அனுதினம் புகழுவோமே. 3

ஆதிநபியுல்லா ஹிஜரத்தாகி ஆயிரத்தொரு நூற்றாண்டுபின்,
ஓதுமெழுபத்து ரண்டதிலே உரைக்கும் தாதுபின் வருசந்த
தனில், மாதம்வளர்கின்ற சித்திரையில் வளரும் பிரையது
ரஜபுதனில், வேதம்நெரியுள்ள பறுலுமாலே விளம்பினேனிதை
யரியுமென்றார். 4

வீசும் பாரிசு கிதாபுரையை மேவியருள்செய்து பொருளத
னை, வாசமுடன்வெள்ளை தமிழுரையாய் மதாருஸாஹிபு விள
பலுற்றேன், தேசமனிதரே யரிந்துநீங்கள் சிந்தைதனில்வை
த்து கொள்வீருகில், நேசமொடுக்கத்தி லிருபதியில் நிரைந்த
சொர்க்கத்தில் வாழ்வீர்களே. 5

அல்லாவொருவனை யரியும்வகை அஹமதூதமை யரிவதுவு
ஞ், சொல்லாஜடலத்தை யரிவதுவுந் தொகுத்தஈமானை யிசு
லாத்தையும், நல்லமுழுக்குடன் தயமத்தையும் நாடிவொலுச்
செய்து தொழுவகையும், எல்லாபருலுடன் வாஜிபையுமி
சைந்தசுன்னத்து முஸ்தஹபும். 6

பொங்கு மக்ரூஹுடன் ஹறுமுருச்சல் பொதுவிலாகிய மு
பாஹதுவுந், தொங்கு நடப்புகளருப்புவகை தொகுத்துவு
ரைக்கிறேன் நெரியொழுங்கை, எங்குமிதுவகை தனையரிந்து

யிச்சை யுடன்வைத்து கொள்விராகில், சங்கையுடன் வெற்
றிமாருயமும் தாஜாத்துடன்மிக வாள்வீர்களே. 7

நாயனொருவனை யரியுவகை நல்லஷரிஹத்தில் நிகழ்த்துகிரே
ன், தாயிங்காயிமா யென்றென்ரைக்கும் சமதாயிருந்தெங்கு
மிரண மீவோன், வாயுங், கண், செவி, குமிள், கரந்தாள்வடி
வுசிரசங்க உகமையில்லான், லாஇலாஹா இல்லல்லாவென்
று நாடியரியவே பறுலரமென்ருர். 8

ஆதிமுஹம்மது நபியுல்லாவை அரியயீரைந்து வகையைகேளு
ஞ், சோதிநபிமுடி யருசின்மேலே துய்யமலரடி தகுத்ததருவி
ல், காதவழியெட்டு திசைகளெங்குங் கஸ்தூரிமணங் கமழ்து
வீசும், பேதவலம்ஜலம் கண்டதில்லை பேனு, புழுப்பூச்சி
வொட்டாதங்கம். 9

ஆகமுளநபி நித்திரையில்அசதிமரதியுமில்லையென்றும். மேகங்
குடையிட்டு அலங்கரித்து முன்கண்டதூரம் பின்னுங்காணு
ஞ், சாய்கைநிழலது சாய்ந்திடாது சங்கைமுஹம்மது நபித
மக்கு, ஆகயீரைந்து வகையுடனே அரியப்போதுமென்று
ரைத்தனரே, 10

ஈமானிலமையை ஷரஹின்படி இயல்பாயரியவே பருலதுகே
ள், சீமாநிணையில்லா நொருவனென்றும்சிரந்தமுஹம்மதுதூத
ரென்றும், நாமமனதுளே நாவுரைபோல்நாடியிருத்தியே தரி
ப்படுத்தி, கோமாநபிக்கீமான் கொண்டுமனங் குளிப்போது
மென்றுரைத்தரேன. 11

சீருள்ளநல்ல யிசுலாந்தனில் சிரந்தஷரீஹத்தில்பருலதுகேள்,
நேருள்ளவல்லோ னேவல்தனை நினைவாயிருத்தியே தரிப்படு
த்தி, பேரும் பெருந்துய்ய சியலைசெய்து பேணிவிலக்குதல்
தவிழ்ந்து கொண்டு, ஏரும்பெருமிந்த சியலுடனே யிசுலாம
ரியவே பருலாமென்றார். 12

தன்னையரிகின்ற வகையாவது சாற்றுமிருபத்து மூன்றுபங்
காம், அன்னையுடபங்கு சதைமூளைதோ லானவுதிரமும் பங்
குநாலாம், உன்னுபிதாபங்கு நாம்புசவ்வு மோதுமெலும்புட
ன் ரோமமாமே, வன்னிவாய்வுமண் ஜலமாகாசம் மாந்தர்ப
டையுண்டமலக்கஞ்சாமே. 13

அரிவுநினைவுட னுணர்வுபுத்தி யரியுமிதுபங்கு ரூஹானிக்கி
உரியபார்வையும் பேச்சுமூச்சு முற்றகேள்வியும் ரூஹின்பங்
காம், நெரியுள்ளரூஹு ரூஹானியும் நீதிபெரியவன் பங்கதா
கும், பெரியோரிருபத்தி மூன்றுவகை பேணியரியவே பரு
லாமென்றார். 14

நூற்றிமுப்பது பருலாவது னுவலக்கேளுமே தீனோர்களே,
சாற்றும்பருலதில் முதலாவது ஷார்குர்ஷியின் வசயைக்கே
ழும், மூத்தமுஹம்மது நபியுடைய முதலாம்தலமுறை நால
ரிய, ஏற்றமதஹபு நால்ரிய இதமாஒனுவிலே பறுலுநாலாம் 15

முழுக்கில் மூன்றுடன் தயமமூன்று மொழியுந்தொழுகையில்
பதினைந்துமாம், ஒழுக்கமாகிய நோமைந்தும் ஊணிதொ

மூனைகயில் நிய்யத்தைந்தும், செழிக்குமிசுலாத்தில்ஐந்துமூண்
டுஞ் கிரந்தயீமானிலாருமூண்டுஞ், சுளிக்கும்ரக்காயத்தில் பதி
னேழுண்டுந் தொகுத்த நோன்பதி லருபதென்ருர் 16

நல்லநெரியுள்ள ஈமானிலே நயந்துபருலது ஆரதுகேள், எல்
லாபடைப்பயும் படைத்திரணம் யீந்தபெரியவ னொருவ
னென்றும், வல்லோன்பணிவிடை செய்துவரும் வானமல
க்குக ளுண்டென்பதுஞ், சொல்லால்பெரியநால் வேதத்துட
ன் சுஹுபுநபிமார்களுண்டென்பதும, 17

நம்மநபியுல்லாமுஹம்மதுடநபிகள்முருசலீ னனேவோர்களும்,
உன்மையுடையோன் தூதாங்களென்றும் ஊணிமனதிலே உ
ருதியாக்கி, செம்மையுடநாளை யொடுக்கமென்னும் சேருங்கி
யாமத்து நாளதிலே, வண்மையுடனெல்லா உயிர்பலதும்மௌ
த்தாயடக்கியே அழித்தபின்னர். 18

மீண்டுபண்டுபோ லுயிரைவிட்டு மீளயெழுப்பியே திருமுன்
னுக்கி, நீண்டசியலுள்ள நன்மைதின்மை நிரையாய்தராசுலே
நிருத்துப்பார்த்து, பூண்டநன்மையுங் கனத்ததாகில் புகுவார்
சொர்க்கத்தில் தீதாருடன், மாண்டதின்மையுங் கனத்ததாகி
ல் வதைக்கும்நரகத்தில் வருத்தமாவார். 19

இந்தவகையாரு மீமானிலே யிதமாயரியவே பருலாமென்ரு
ர், முந்திஇசுலாத்தி லஞ்சுவகை மொழியும் பருலதை யுரை
க்குகிரேன், அந்தமுளதுய்ய கலிமாச்சொல்லி ஐந்துநோமுந்

தொழுதுகொண்டு, வந்தரமுலானி லாரஞ்சுநாள் வருசையு டநோன்பு பிடித்திடவும். 20

மிக்கயிருபது ✝ களஞ்சிப்பொன்னில் மிகவும்வருசத்தி லரைக்களஞ்சி, சக்காத்துக்கொடுயெழியவர்க்கு தானும் வயதிலே வொருஹஜ்ஜுதான், தக்கசிலவுக்கும் வழித்துணைக்குந் தடத்தில் பயமச்ச மில்லாவிட்டால். மக்கந்தனில் சென்று ஹஜ்ஜு செய்ய மணமாய்பருலஞ்சு மிசுலாமென்றார். 21

இலங்கும் ஈமானில் வாஜிபுதா னீராருரைத்திட கேட்டருளீர், துலங்கு மாலீம்களிடந்தனிலே துய்யமுஹப்பத்தா யிருந்துகொள்ள. நலங்கும்பாசிக்கா னவனிடத்தில் நாடிபேசாம விருந்துகொள்ள, ஜலந்தானருந்தி - வேண்டும்போர்க்குதாகந்தீர்திட தருமதாமே, 22

பாரில்நோயாளி வீட்டில்சென்று பகர்ந்துவிசாரிக்க யெழியோர்தம்மை, காருங்கிருபைவைத் திடமையத்தை கழுவி குளிப்பாட்டி துய்தாக்கவும், பேருபெருமிசுலாமிரண்டுபேர்கள்பகைத்தாக்கா லுரவுசெய்ய, நேருந்நெறியினில் கல்லுமுள்ளு நிரம்பாமல்னிதம் விலக்கிடுமே, 23

செல்லும்வழியினில்நஜீசைகண்டால்திடனுதபுப்ராவாக்குதலுங், கல்பிலுருதியா யெத்தீம்களை சருணையுடன் சிரசைத்தட

✝ ஒரு களஞ்சி யென்பது காலேஅரைக்கால் ரூபாயிடை

வல், A சொல்லினுயர்கணஞ் செய்யிகின்ற்ற துப்பதலங்தேடி-
போரதுவும், ஙல்லஈமான் தன் குடும்பத்தார்கு நாடியுரைத்தி
டயிருருமே; 24

பத்தமரவாது ஷரிஹத்திலே பகர்ந்தவாஜிபு யேழுண்டதில்
A பித்தர்தொழுகையும் B அலுகாவுடனேவேண்டும்குர்பானி
சதக்காபித்தர், நத்தவமுள்ள யெஹறுங்கட்ட நாடிஉம்ருவுஞ்
செய்துகொள்ள, வித்துரு தொழுகையுமெழுவகையும் விளக்க
மாகவே வாஜிபாமே: 25

எட்டுவகை யுண்டுஞ் சரீஹத்திலே இலக்குஞ்சுன்னத்தைகே
ழுமினி, வட்டமுகப்பணி சிரசுமூக்கு மயிருங்சமுக்கட்டுமேல்
மீசையும், வெட்டியுடன்மானமேரமம்வாங்கி மிகுந்து வளர்கி
ன்றநிகமருக்க, எட்டுவயதிலே சுத்தனுசெய்ய யிதமாயிவை
யெட்டுஞ் சுன்னத்தென்றூர் 26

ஆயும்ஷரிஹத்தில் வாஜிபுதா னரியுமிதுவகை நான்குண்டதி
ல் தாயுந்தந்தைக்கி கிதுமத்திடதகப்பன் பிள்ளைக்கி தீன்வரு
த்த, ஆயும்புருஷன் தன்பெண் சாதிக்கிஹாஜத்து நிரவேற்றிக்
கொள்ள, நாயன்வணக்கம்போல் புருஷனுக்கு நாடிகிதுமத்து
செய்யபொதும். 27

வருசையுடனீமா னீதியஞ்சும் வளமாயுரைக்கிரேன் கேழு
மினி, உருலசநாவினில் பேச்சைவிட்டு வொழுங்காய் பேசி
யே தனித்துக்கொள்ள, தெரிசைவணக்கதில் முளித்துக்கொள்

A ஹஜ்ஜுக்கு போனவர்கள் மதினவுக்கு போரதுவாஜிபு
A ஈதுல்பித்தர் B ஈதுல் அலுஹா

ல் தீபோலடிவயர் காய்ந்துகொள்ள, பருசையுடனன்மையரி
ந்துசெய்ய பகருமிதுஐந்தும் நீதியென்றார் 28

இருணுங்சொருனெரி யீமானுக்கு யிபம்பக்கேளுமே யிதமு
ளோரே, ஒருவனுடமைக்கு ஆசைபட்டு ஊரில்வளக்கோரம்
பேசவேண்டாம், மருவியிசுலாத்தில் வருமவனை மனிதரிகள்
கொச்சைபேசவேண்டாம் வெருவிப்பரதேசி மனங்கலங்கவி
ணிலனியாயஞ் செய்யவேண்டாம். 29

தீனுக்குகந்ததோர் சச்சவடஞ் செய்யபெரியோரை யரிவு
கேள்க்க, ஈனமணுகாமல் ஹலாலைதின்று இசைந்துஹராந்த
ள்ளிஇயல் பாகவும். தானுமுடிப்புகள் துப்பரவாய் தரணிலி
ருப்பிடந்துய்தாகவு, யானிலிதுநெரி யொன்பதுவும் வருசை
யுடனீமா னெரியிதென்றார், 30

விசும்புள்ளாடிடும் பரவைகாலி விளங்குமருப்புலே பருவுநா
லாம், A இஸ்லாமாகியே ஆருப்ஐந்தும்பிசைந்துஅதன்படிஅம
லுள்ளோனுய், நசலுமுடிச்சுக்குங் குரவனைக்கு நடுவேயொ
துங்காம லருச்கும்போது, பிசுமிலாவெனுந் திருநாமத்தால்
விளங்கும் நரம்புநா லரிக்கவேணும். 31

A இசுலாமா யிருந்தால்போதும் ஆனுல் அமலுடனிப்பது
பேணுதல் முடிச்சுக்கு மேலருத்தால் மூன்றுநரம்புகளருபட்
டாலும் பெண்கள் பாலிகாகாத சிருவர் அருத்தாலுங் கூடும்
முடிச்சுக்குகீழ் அருத்தால் கூடாது.

சிரந்த சுன்னத்து நாலுண்டதில் திருந்தவொலுசெய்துகொள்ளவேணும், பரிந்துபதமுள்ளகத்திகொண்டு பதிவாயருக்கவே மூன்ருவது, திருந்தகிபுலாவினேராகவே தீர்க்கமுடனின்று அருக்கிரதை, பொரிந்தியுசும்பாமல் பிடிக்கவேணும் புகழுமிதுநான்கும் சுன்னத்தென்ருர். 32

நன்னுமருப்புலே முஸ்தஹபு நாலுண்டருத்தது மொளத்தாமட்டுந், தண்ணீருடன்கத்தி கழுவாமலுந் தானும்வாய்மொழி யுரையாமலும் எண்ணியருக்குமுன் பின்னுலேயும் இசைந்தசலவாத்து ஷஹாதத்தோத, சென்னுமுதிரத்தை பிரப்படுத்த சிரந்தமுஸ்தஹபாகுமென்ருர். 33

நான்கு நரம்புடபேரைகேளீர் நவிலுங்கல்புளேகில்குமென்று சீலமுடன் மிர்ரீஹுடலுக்குள்ளே சிரந்துகொளுகியே நிர்க்குமது, கோலமுடனங்க மெல்லாஞ்சுற்றுங் குற்றுமிற்றஹீம்தூஷாரக்கு; ஒலமுடனிந்த நரம்புநாலும், வூணியருக்கவே போதுமாமே. 34

நான்கு நரம்புள்ளே கில்க்கென்பதுநாடியிதுவெள்ளைகாற்றருந்தும். பாங்குடன் மிற்றீஹ்புல்லு திண்ணும் பச்சைநரம்புக்கு யிரையதாமே. எங்குஞ்சிகப்பது ஒன்றுந்திண்ணு திருக்கும்நரம்பது தூசாரக்கு, பொங்கமுடனிந்த ஷருத்தரியபோதுமருத்தது ஹலாலாகுமே. 35

நீதிபிஸ்மில்லா ஹிற்றஹ்மா நிற்றஹீமென்று கத்திசொல்லும், யாதுவகையுடன் சிரசுரைக்கும் யாகபூரென்று திக்ருசெய்யும், விதமுடனிந்த சதையானது விளம்பும் அஜீசென

வேயுரைக்கும், இதும்தோலது யாரஹீமென் றுரைக்குமிதி ன்வ்ஷை யரிந்துகொள்ளே. 36

உண்ணுமொருங்குக ளுரைக்கிகிறேன் உணரும்பசிவந்தாலச னஞ்செய்ய, எண்ணுமொழுவுடன் பிசுமிலோதி யிருந்து அதபுடஞ் சாயாமலே, நன்னுபெரும்பிடி பிடிக்காமலே நயந் து சிருபிடி பிடித்துவுண்ணுந், திண்ணுவொஜீபன முக்கால் வயர் சிரந்துபருகுமென் றுரைத்தனரே; 37

சங்கையுடன் தண்ணீர் குடிக்குவகை சாற்றும் பிசுமிலேயோ தியுண்ணும், எங்குமீருண்டால் மூண்றுமுடர் யிரச்சல் மூ ச்சன்றி யிருந்தருந்தும், பொங்கமுடன் வழி நடந்திழைப் பில் பொருத்துஆரியே யிருந்தருந்தும், மங்கையுடன் சென் று சேர்க்கையிலும் மயங்குஞ்சயனத்தி லருந்தவேண்டாம் 38

இந்தவகையுடன் நாவிடத்தி விதமாய்நீர்தனே நின்றறுந்தும், எங்கும்நீர்பந்தல் நின்றுகொள்ளும் .யிடுக்கமாகிய தலந்தனி லும், பந்த புரவிமேலேரிநின்றும், பதிவாவொலுச்செய்து முடிந்தபின்பும், சொந்தமுடன் மக்கா ஆபுஜம்ஜம் சுனேநீர் நிலேயாய்நின் றருந்தலாமே, 39

சொன்னதலமது நாலுமன்றி தொகுத்தநிலேயிலே நீருமுண் டால்; கொள்ளமருந்தில்லா தங்கடமுங் குரித்தேபிடித்திடுங் கோர்தாரியாய், அன்னம்பருகினல் கையிர்கொடுத்து அரு மைபெருமையாய் அனுப்பவேண்டும் என்னவிதமான தங் கடமும் யெழுதில் சிபாவாகி விடுமேயென்றார் 40

ஆடையுடுக்கின்ற வகையாவது அதபாய் தொப்புளின் மே ல்மாய, மூடியுடுக்கின்ற உடையைத்தானும் முளங்கால் மா யவே தானுடுத்தி, தேடுஞ்சர்பந்து யேழுமுளஞ் சிரசுதனிலு ச்சி மூடலாகுங், கூடுமுடைஜுப்பா சருயாகிலும் கூடியுடுக் கவுஞ் சுன்னத்தாமே. 41

கலையும்பட்டுடை ஆண்பிள்ளைக்கி ஹறுமாயிருக்குமென் றருளி ச் செய்தார், சிலைகளெழுதிய உடைகள்ஹறுஞ் சிலுத்தக ம்பிளி மக்ருஹாமே, ஜலங்கள்பொருந்திய உடைகள்ஹலா ல் தண்ணீர்சிதரிய உடைகள்வேண்டாம், குலவியுடன்வெள் ளை பஞ்சுடைகள் குரித்தேயுடுப்பது சுன்னத்தாமே. 42

சயனஞ்செய்திடா தலமேழுண்டு சாற்றுமரிவுகள் கேள்க்கு ம்போது, நயமாய்பள்ளியில் தொழுகையிலும் நல்லகுர்ஆ ஞேதுஞ் சபைதனிலும், ஜெயமாமகரிபு நேரத்திலுஞ் சிரந் த சுபுஹென்னும் பஜருநேரம், இயம்புமேழிடஞ் சயனஞ்செ ய்தா விரையோன் லஹனத்து பிடிக்குமென்ருர். 43

பத்துமூன்றிடம் பேசாத்தலம் பகரக்கேளுமே தொழுகை யிலு, மெத்துமரிவோது மஜ்லிசிலு மிருக்கும் வலஞ்சலஞ் சேர்க்கையிலும், பெற்றதாய் தந்தைசொல் தட்டியும் பெரி யோர்கள்முன் குர்ஆன்பள்ளியிலுஞ், சுத்தவொலுசெய்யும் பாங்குசொல்லுஞ் சொன்னதலம்பேசா தரியுமென்ருர், 44

சொன்னபடியுட னசனஞ்செய்ய தொகுத்தவொழுங்கு- நீ ருமுண்ண யின்னவகைப்படி பேச்சுபேச யிலங்குஞ்சரிஹத்

தில்ஒழுங்கரிய, பண்ணுமொளுங்குட னுடையுடுக்க பகர்ந்த
படியுட னசனஞ்செய்ய, முன்னுமுஹம்மது நபிஹதீசில் மொ
ழியுஞ் சுன்னத் தாகுமென்றூர். 45

ஷார்குர்சியின் பொருளாவது சங்கைநபியுல்லா தலமுறைநா
ல், பேருமப்துல்லா தம்மையீன்ற பிதாவுமப்துல் முத்தலிபு
மாகும், பாரிலவர்பிதா அப்துல்ஹாஷீம் பகருமவர்பிதா அ
ப்துல்முனப், நேருள்ளயிந்த தலமுறைநால் நிகள்த்தியரிய
வே பறுலாமென்றூர். 46

நாலுமதஹபு நாமங்கேளீர் நல்லஅனபியுஞ் சாபியுமாம், மா
லிக்குடனிமாம் அம்புலியும் வகுத்தமதஹபுநாலுண்டென்று
கோலியரியவே பறுலாமென்றுங் கோமாநிறையவ னருள்படி
யே, ஆலநபியுல்லா வும்மத்தோர்க ளரியவேணுமென்றுரைத்
தனரே. 47

துலங்குமொலுவுலே பறுலுநாலு துய்யஜலங்கொண்டு முகங்
கழுக, நலங்குமிருமுளங் கையிமட்டும் நன்றுய்கழுவியே மூ
ன்றுவது, பலங்குஞ்சிரசிலே நாலிலொரு பங்குமசகுதான்
செய்துகொள்ள, யிலங்குமிருகெண்டை காலின்மட்டு மிதமா
ய் கழுகவே பறுலாமென்றூர். 48

சுன்னத்தொலுவிலே பத்துவகை தொகுத்து வுரைக்கிறே
ன் கேளுமினி, முன்னேயிஸ்திஞ்சா துய்தாகவும் முதலோ
ன்திருநாமங் கூர்வதுவும், உன்னியிருமணி கட்டின்மட்டுமு
கந்துயிருகரந் தான்கழுவ, வின்னமணுகாமல் விசுவாக்கிடவி
ளங்கவாய் கொப்பளித்த பின்னே. 49

விதமுடனிரு நாசிக்கினீர் விளங்கவெலுத்தவுந் தாடிகளை, கோதிக்கழுகவே கைசால்விரல் குரித்துமவைகளை கோதிக்கொள்ள, காதுக்குதண்ணீர் மசகுசெய்ய கணக்குட னெல்லா வுருப்புகளை, நீதியுடன்மூன்றுதரங்கழுக நிரைந்தசுன்னத்து யிரைந்தாமே. 50

அஞ்சுவகையுண்டு முஸ்தஹபு அரியுமொலுவிலே A நிய்யத்திட, செஞ்சொல்லுடனெலு அடவுடனே தீர்க்கமாகவே கொண்டுவர, மிஞ்சவலப்புர முன்துடங்க B மேவிசிரசெல்லா மசகுசெய்ய. இஞ்சொல்லீரத்தின் மேலீரமும் யிதமாய் கழுகவே முஸ்தஹபாம். 51

நாலுவகையுண்டு வொலுவுக்குள்ளே நபிலை யுரைக்குரேன் கேளுமினி மேலிலுருப்புகள் கழுவும்போது மேவிக்கலிமாவும் ஷஹாதத்தோத, மாலைகழுத்திலே மசகுசெய்ய வணங்கவுடுத்திய வுடைகழுக, கோலஇஸ்திஞ்சா செய்யுங்கையைகுரித்துமண்தொட்டு கழுவுமென்றார். 52

துய்யவொலுவுக்குள் முரிச்சலான தொகுத்தயிருபத்திரண்டுகேளும், நொய்யசுகத்தண்ணீர் சிருநீருடன் நோக்காட்டுரத்த மணித்தண்ணீரும், நய்யும்சிருநீரு செய்தபின்பு நவிங்கியாதொரு நீர்கசிந்தால் மொய்யவிளுந்திடுங் கல்லடைப்பு முந்துவாரத்தில் முரிச்சலாரே. 53

A நிய்யத்துச்செய்வதும் B சிரசெல்லாமசகுசெய்வதும்சுன்னத்து

பிந்துவாரத்தில் முருச்சலஞ்சும் பேணியுரைக்கிறேன் கேளு
மினி, குந்துவலஞ்சலம் காத்துமூலங் கூடபுழுவுமே பிரத்தி
யானால், விந்தையுடன்வைப்பு திரியினோடு வெளியில்யாதொ
ரு நீர்பொசிந்தால், யிந்தவகைஐந்தும் பிந்துவார மியம்புமுரு
ச்சலா மெனவுரைத்தார், 54

இன்னும்வரப்பட்ட முருச்சலாரு மியல்பாயுரைக்கிறேன் கே
ளுமினி, தன்னைமறதியாய் மஸ்தெடுத்து தானேபைத்திய
வெரிகொண்டாலும், வின்னபேதக நித்திரையில்மேவி முயல்
கண்ட வலிப்பெடுத்தால், பன்னுந்தொழுகையில் வெடிசிரிப்
புபகருமிதுவுந்தான் முருச்சலாரே. 55

அங்கம்பிரத்தியில் வெளியானது அஞ்சுமுருச்சலுண் டதனை
கேளும், பொங்கியெழுப்பிய உதிரஞ்சிய்யும் பொன்னீரெழு
ம்பிய சென்னீருந்தான், தங்கியெழும்பிய வாய்கிரயசத்தியெ
டுத்தாலு முருச்சலஞ்சாம், இந்தயிருபத்திரண்டுவகை இயம்
பினேனிந்த முருச்சலென்றார். 56

அஞ்சுமுழுக்குண்டும் பறுலானது ஆசைகொண்டுதான் மணி
நீங்கினால், வஞ்சியுடனேதான் வரைமறைய வசந்துசேர்க்கை
யுஞ் செய்திட்டாலும், மிஞ்சுஷைத்தானி னர்க்கத்தாலுமிக
வும்பெண்பிள்ளைஐயில்கண்டாலும். இஞ்சொல்லுடன்பிள்ளை
துடக்கானலு மிசைந்தமுழுக்கஞ்சும்பறுலதாமே. 57

இரண்டு முழுக்குண்டு வாஜிபான தியம்பக்கேளுமே முதலா
வது, உருண்டமைய்பத்தை முழுக்காட்டவும் ஊணியாதொ

ருகுபிருனவன், வரண்டஜூனுபுட னிசுலாத்திலே வந்தவுட
ன் முழுக்காட்டுவதும், திரண்டவாஜிபு இரண்டுவகை செப்பி
னேனிதை யறியுமென்றார். 58

சுன்னத்தாகிய முழுக்கஞ்சுகேள் சுகந்தவெள்ளிநாள் முழுகு
வதும், முன்னில்வருடத்தி லிருபெருநாள் உகந்தயீதுநாள்
முழுகுவதும்; பண்ணியரபாவில் முழுகுவதும் பருத்திராவி
னில் முழுகுவதும், நன்னீரிலங்கிய யெகராங்கட்ட நாடிமுழு
கவுஞ்சுன்னத்தாமே. 59

நான்குமுழுக்குண்டு முஸ்தஹப்பு நவிலகேழுமே குபிருனவ
ன்; ஒங்கும்ஜூனுபன்றி இசுலாத்திலே ஒழுங்காய் வருபவன்
முழுகுவதும், பாங்காய்லைலத்துல் கதர்தனிலும் A பணிகளை
டுத்தபின் முழுகுவதும், தாங்குஞ்சிருபிள்ளை பாலிகாணுல் சா
லவயதெண்ணி முழுகுவதும். 60

முழுக்குவகையிலே பறுலுமூன்று மொழியக்கேளுமே முத
லாவது, பளுக்கவாய்தன்னைக் கொப்பளிக்கப் பதிவாய் நாசிக்
கு நீர்செலுத்த, இழுக்கும்சிரசுடன் B அங்கமெல்லாம் இத
மாய்கழுகியே நீர்செலுத்த, ஒளுக்கமாகிய யிம்மூன்றுந்தா
னேதுமுழுக்கிலே பறுலாமென்றார். 61

துய்யமுழுக்கிலே சுன்னத்தஞ்சு சொல்லக்கேளுமே யிருகர
முஞ் செய்யுமணிக்கட்டு மட்டளவுஞ் சிறந்தவிரல் கோதிக்க
ழுகுவதும், நய்யவொலுச்செய்து அங்கந்தனில் A நஜீசைத்

A சவரஞ்செய்தபின் முழுகுவது. B உச்சிமுதல் உள்ளங்கா
ல்வரை நனையவேணும் ஒருரோமம் நனையாவிட்டாலும் மு
ழுக்குக்கூடாது.

துப்புர வர்க்குதலும், மெய்யாய்ஜலங்கொண்டு மூன்றுதரம்
மேனிகழுகவுஞ் சுன்னத்தாமே. 62

மூன்றுபறுலுண்டும் தயமத்திலே மொழியக்கேளுமே முதலா
வது, ஆண்டோன் B நிய்யத்துச்செய்திடலு மதபாய்த்தரையி
னில் கையைதட்டி, பூண்ட முகந்தனைத்தடவுதலும் பூமிதனி
லிரு கையைதட்டி, தூண்ட இருமுழங்கையின்மட்டுங் துவள
த்தடவவும் பறுலதாமே. 63

செய்யுந்தயமத்தில் சுன்னத்தான சிறந்தகாரியம்நா லுண்ட
தில்; கையைநிலந்தட்டி முன்னேதள்ளி கரத்தையதன்படி பி
ன்னிழுத்து, பய்யவிரல்களை விரித்தெடுத்துப் பாங்காயுதரவு
ஞ்சுன்னத்துவாம், எய்யுந்தயமத்தி லிப்படியே யிதமாய்செய்
ய்வே போதுமென்றார். 64

தயமஞ்செய்திட வஸ்த்ர றண்டுஞ் சாற்றக்கேளுமே தூசியி
லும், ஜெயமதாகிய மண்மணலுஞ் சுருமாக்கல்லுடன் சுண்
ணம்புந்தான், வயமதாகப்பொன்னரிதாரமும் வஸ்திலாருமா
ந்தயமத்திற்கு, நயமாய்நீரிலா விடந்தனிலே C நாடித்தயமங்
கள் செய்யப்போதும். 65

A முன்துவாரம் பின்துவாரம் இரண்டையும் மூங்கிக்கழுவிக்
கொள்வது சுன்னத்து B எந்தவணக்கத்துக்கு தயமஞ்செய்ய
வேணுமோ அதைநிய்யத்துச்செய்வது C வியாதியஸ்தனு
ந்தயமஞ்செய்யலாம்.

மோஷாதனிலேதான் மஷஹூசெய்ய மொழியும் பறுலதை
யுரைக்குகிறேன்., நேசத்தலத்தாளிக் கொருநாள்மட்டு நெ
டியமூன்றுநாள் முசாபருக்கு, பாசமுடன்மூன்று விரல் நீ
ர்தொட்டு வளமாமஸ்ஹூதாஞ் செய்யும்போது, வாசமுன்
னங்கால் தொடுத்துகையில் பரண்டையளவுமே தடவப்போ
தும். 66

தவணை யரியவேஜலுவந்தால் சாற்றும்வகையது கேளுமினி
அவனுள் மூன்றுக்கு குறைந்ததுவும் அதிகநாள் பத்துக்கே
றினதும், கவனஞ்செய்கின்ற துடக்குத்தீர கண்டால்நாற்ப
து நாட்க்கதிகம். பவனியுதிரந்தான் நோக்கரடென்றுபதிவா
யுறிந்திடும்பண்புளோரே. 67

பிள்ளைத்துடக்குள்ள நாரியரும் பெரிய ஜயிலுள்ள பெண்பி
ள்ளையும், பள்ளிதனில்வரத்தொழுதுகொள்ள பதிவாய் நேர
ன்புடன் குருனோதவும், தெள்ளுங்காபாவைச் சுற்றிவரச்சே
ர்க்கைசெய்திட **A** குருனெழுத, ஒள்ளிவுறையில்லாக் குரு
னைத்தொட ஒண்ணுதிருநான்கு செயலுமென்றார். 68.

நல்லறமுலானில் வரிசைநோன்பு நயந்துகலாவைக்க வேணு
மென்றார். தொல்லஜலுட வுதிரநிறந் தொகுத்தநிற மாறு
சொல்லுகிறேன் கல்லச்சிகப்புடன் பொன்னிறமுங் கழுநீர்
மண்ணிறங் கருப்புப்பச்சை, சொல்லுமிதுவாறும் ஜயிலுவ
ந்தால் தொகுத்தநிரமிதென்றறிந்துகொள்ளே 69

A குரானை தொடாமல் எழுதலாம்.

பகருந்தொழுகைக்குப் பிறத்தியிலே A பறுலேவிடச்செய்ய க்காபருவான், மகறவாஜிபை தற்குச்செய்தால் வலியபாவ மாம் பாவிக்காவான், முகர்ரம்சுன்னத்தை தற்குச் செய்தா ல் முஹம்மதுநபி ஷபாஅத்தில்லே, விகாமணுகிடா முஸ்த ஹபை விடச்செய்தால் குற்றமில்லேயென்றார். 70

வணங்குந்தொழுகையில் பறுலேவிட்டால் வலியதொழுகையு முறியுமென்றார், யிணங்குவாஜிபை விட்டுவிட்டா விருத்தி யேவந்து ஹராமடுக்கும், அனங்குஞ்சுன்னத்தை விட்டதா ல லடுக்குமக்ரூஹாகுமென்றார், பிணங்கிமுஸ்தஹபை விட்டு விட்டால் பேணுநன்மையுங் கொஞ்சமென்றார். 71

விதிக்குந்தொழுகையில் பறுலாகிய விபரமுரைக்கிறேன் கே ளுமினி, உதிக்கும்பஜ்ரிலே ஆதம்நபி உகந்துதொழுதிடும் பறுலிரண்டாம், மதிக்கும்லுஹரிலே யிபுறாஹீமு வணங்கித் தொழுதிடும் பறுலுநாலாம் துதிக்கும் அசரிலேநபி யூனூசு தொழுதுவணங்கிய பறுலுநாலே. 72

ஈசாநபிதொழும் மகரிபிலே யிதமாய்வணங்கிய பறுலுமூன் றும், மூசாநபிதொழும் யிஷாதனிலே முயன்றுவணங்கிய பு றுலுநாலாம், நேசமிதுவைத்து நேரத்துடன் நீங்கள்பதினே ழு றக்காயத்தையும், ஆசையுடன்தொழும் பறுலாமென்று ஆண்டபெரியவன் விதியாக்கினான். 73

A பறுலே அல்லத்தட்டினல் காபருவான்.

ஆகியருட்ப்படி ஐந்துவக்து மதபாய்த்தொழுவதில் பறுலேக் கேளும். நீதிபதினைந்து பறுலுமுண்டு நிறைந்தவெளிப்பறு லெட்டுண்டதில், வீதம்முடன்நேரந் தானறிய விழங்கும் மொழுச்செய்ய நீர்தேடவும், போதமுடன்துய்ய வுடைதே டவும் புவ்னமதில்துய்ய தலந்தேடவும். 74

உடையும்பறுலான வுடையுடுக்க வூணிகிபுலாவின் திசையை நோக்க, அடைவுடனின்ன நேரமென்று அரிந்துநிய்யத்துச் செய்திடவுந், திடமாயல்லாஹு அக்பரென்று சிரந்தமுந்தின தக்பீர்கட்ட, படியிலுறைக்கின்ற யிருநான்குந்தான் பகரும் வெளிப்பறு லாகுமென்றார். 75

ஏற்றமுடனேழு வுட்பறுலே யெடுத்துவுறைக்கிறேன் கேளு மினி; க்ாற்றதொழுகையி லஹம்தான கனதிபெறும்மலிபு நிலேநிற்கவும், பார்த்துவொழுங்குடன் கிருத்தோதவும் ப ணிந்துஹேயுள்ளருக்கூஹு செய்ய, வீத்தும்மீமுள்ளசஜிதாச் செய்ய விளங்குந்தாலுள்ள இருப்பிருக்க. 76

ஆனதொழுகைய்யை யடவுடனே யன்பாய்கொடுவர வொழு ங்குடனே, தானதொழுகையுந் தொழுதுகொண்டு சங்கையு டனேதான் பிர்த்திப்பட யினமணுகாத தொழுகைக்குள் ளே யேழுபறுலுந்தா னுள்பறுலு, தீனிலிலங்கிய யிப்பதி னைந்துதான் சிறந்தபறுலென்று அறியப்போதும். 77

வருசையுடனேதா னிருபத்தொரு வாஜிபுறைக்கிறேன் கே ளுமினி, தெரிசையுடனல்லாஹு என்றுரைத்து சிறந்த அக்

பனைச்சேர்த்திச்சொல்லல், பருஸ்சையுடனத்த ஹிரியாத்ஸ்த்
யும் பதிவாயுரைத்திட யிரிருப்பில், வுருஸ்சையுடன் முதலிரு
ப்பிருக்க வுகந்தறக்காயத்து நாலுள்ளதில். 78

மிக்கபறுலான தலந்தனிலு மிலங்கும்பறுலதை தான்சேர்க்
கவும், தக்கவாஜிபை வாஜிபான தலத்திலதபுடந் தான்சேர்
க்கவும், ஒக்குமெனசலாம் சொல்விக்கொண்டு உகந்துதொழு
கையில் பிறத்திப்பட, பக்கமுள்ளிரு றக்காயத்திலும் பாத்
திஹாவுடன் கிருத்தோதவும். 79

குறித்துபெரியதோ ராயத்தாலுல், கூறுஞ்சிரியமூன்றுயத்
தோத, திருத்தும்பாத்திஹா முற்படுத்தி சிறந்தசூறத்தைப்
பின்பிலோதி, நிறுத்துபாத்திஹா றக்காயத்தொன்றில் நீதி
யுடனெருந்தாமுரைத்து, உறைத்தபலனுள்ளவித்ருதனி லுக
ந்து துஆகுனூத்தோதவேணும். 80

நாடிவிரைந்துதா னேதுந்தலம் நன்றுய்விரைந்துதா னேத
வேணும், கூடியமர்ந்துதா னேதுந்தலம் கூறிலமர்ந்து தா
னேதவேணும் தேடப்பதினுவாஜிபுலே தீர்க்கமுடனென்
றை விடக்கண்டாலும், கூடவிதியாகும் ஸஜூதாசஹ்வு கு
றையுமுறைக்கிறேன் கேளுமினி. 81

குனிந்தருக்ஹூலே ஸஜூதாவிலே கூரதாமதித் தசுபீகுமு
ன்று, பணிந்துயிமாமுடன் பின்பற்றினுல் பகரும் ஸஜ்தாஸ
ஹ்வுசெய்யாதிரும், அணிந்ததொழுகையி லிமாமுடனே ஆ
னுவிமாமைத்தான் பின்பற்றவும், தனித்து வோர்மையா

வணங்கும்போது ஸஜ்தாஸ்ஹவுதான் கொடுவரவும் 82

பெரியசுதிலே தக்பீர்சொல்ல பேணியிமாமின்பின் சென்று நிற்க, வுரியதொழுகையில் A ஸஜ்தாஸஹ்வு வுகப்பாக்கொடு வர வாஜிபென்றூர்; அரியவாஜிபை பேணிக்கொள்ள ஆர்க்கும் விதியாகு மெனமொழிந்தார், விரையுமிருபத்தோர் வாஜிபையும் விளம்பினேனிதை யரியுமென்றூர். 83

தொழுகையில்சுன்னத் தெண்ணுன்குண்டுசொல்லக்கேளுமே நிலையிலெட்டும்; முழுதுமுந்தின தக்பீரிலே முயன்று சேரவே கரமெடுக்க, கொழுகுமிடக்கைதான் கீழேவைத்து குறித்துவலக்கைமேல் வைக்கிரதும், வழுவாமல்பெருஞ் சிரியவிரல் மணிக்கட்டிடதுகை சேர்க்கலாகும். 84

வணக்கம்பெரிய தஞ அகூதுடனே வரிஸ்சபிஸ்மி லாஹீரோதவும், கனகநேருள்ள ஸஜூதாசெய்யுங் கனத்த தலமதைதான்பார்க்கவும், இணக்கமாகவே யிசைந்துகூறு மிருநான்குசுன்னத் திதுவன்றியே, கணக்காய்நேருடன் ருக்கூஹிலே கனத்தசுன்னத்துஇருநான்குகேள். 85

குல்லுருக்ஹிலே தக்பீர்சொல்ல குனிந்துமுழங்காலில் கைபிடிக்க, செல்லுமிருகையின் விரல்களெல்லாம் சிரந்து விரித்தங்கே பிடிப்பதுவும், முள்ளும்புரங்காலே பார்த்துநோக்கி முதுகுந்தலையுமே சரியாநிற்க, வில்லுந்தஸ்பீஹு மூன்றுதரம் விளம்பி முடிந்தபின் தலையெடுக்க. 86

A ஸஜ்தாஸ்ஹ்பு வீதியான யிடத்தில் செய்யவும்.

ர்ப்பனுலக்கல் ஹம்ந்தென்று நாடிசிறுநிலை நிர்க்கவேண்டும்;
தப்பாமலெட்டு சுன்னத்தையுஞ் சாற்றக்கேளுமே ஸஜூதா
விலே, மெய்பாஸஜூதாவில் செல்லும்போது மேவிதக்பீரு
தான்சொல்லவு, மொப்பாய்நாசியைத் தரையில்வைத்து வு
கந்துநாசியின் தாரைநோக்க. 87

இருகாலிருகை யிருமுளங்கா லிசைந்தகிவுலர்வின் திசை
யைநோக்க, கரந்தான்முகத்து நேராகவைத்து கனத்தநெற்றி
யைத் தரையில்வைக்க, கவுலுந்தஸ்பீஹூ மூன்றுதரங் கன்
கமொழிந்துபின் தலையெடுக்க, பகருந்தக்பீருடன் சிருயிருப்
பில் பண்பாய் சுன்னத்து எட்டுண்டுகேள். 88

இருப்பில்நிமிரச்சே தக்பீர்சொல்ல யிடதுகாலைக்கீழ் மடித்து
க்கொள்ள, சிறப்பாய்வலதுகால் நிமிர்ந்துக்கொள்ளச் சிறந்த
கைவிரித் துடைமேல்வைக்க; குறிப்பாய் மடியதைப் பார்
த்துக்கொள்ள கூறும்சலவாத்து வொடுக்கமோதி; நிர்ப்பமா
கவே வலதிடமும் நீதிசலாஞ்சொல்ல சுன்னத்தென்றார். 89

முந்துநிலையிலே ருக்கூஹிலே மொழியுஸஜூதாவி லிருப்பு
க்குள்ளே, வந்தவகைச்சுன்னத் தெண்ணுன்கையும் மாந்தரரிய
வே விளம்பலுற்றேன்; சொந்த முடனிந்த சுன்னத்திலே
தொகுத்தயாதொன்றை விடச்செய்தாக்கால், விந்தைமக்ரூ
ஹூ வருகுமென்று விளங்கியரியவே போதுமென்றார் 90

பொங்கமுடன்துய்ப முஸ்தஹபு புகழுமிருபத்து மூன்றுகே
ளும், வோங்கிவலமிடம் பார்க்காமலும் வொடுக்குபிருமலை

த்தாஞகவும், பாங்காய்வருகின்ற கோட்டாவினைப் புல்லாவி னுக்கிவாய் மூடிக்கொள்ள. தாங்குஞகிரிய மூன்ருயுத்தின்மே ல் சாற்றம்பாடமா யோதவேணும். 91

கையை ஸஜ்தாவில் வைக்குமுன்னே கனதியுடனிருமுழங்கா ல்வைக்க, பய்யாசினை வைக்குமுன்னே பதிவாயிருகரந்தா ன்வைக்கவும், துய்பநெற்றியை வைக்குமுன்னே தொகுத்த நாசியை வைக்கவேணும் செய்யும்ஸஜ்தாவில் தலையெடுத்தா ல் சிறசுமாறலா யெடுக்கவேணும். 92

நிலையிலிருகாலே நாலங்குலம் நேராயகலவே தூரவைக்க, தலை யுமுதுகுமே சரியாய்நிற்க சட்டமுளங்கையை யுயர்த்திக் கொள்ள, நிலையில்வேர்வையும் ஸஜ்தாவினின் நெற்றிதனி லொட்டு மண்தனையும், வலியுத்துடைப்பதை விட்டுபிந்தி வள்ளவிதுசொன்ன மட்டோதவும். 93

முந்ததக்பீரில் பெருவிரலை முனைக்காத்சிருசோணை தனில் வைக்கவும், சந்தருக்கூஹிலே ஸஸ்தாவிலே தஸ்பீஹாரைத் திட மூன்றுக்குமேல், சொந்தமுடனென்றைப் படச்சொல் லியே தோளைப்பார்க்கவுஞ் சலாங்கொடுக்க, பிந்தியாண்டுறக் காயத்திலே பேணிப்பாத்திஹா வோதுமென்ருர், 94

ஊணிஸஜ்தாவில் வயிறதிலும் ஒதிக்கிமுன்கையை அகலவை க்க, வேணுமிருதுடை வயற்றைவிட்டு வேறையாகலவேவை க்கவேணும், தோணுமிருகெண்டைக் காலைவிட்டுத் துடையு மகலவே தூறவைக்க, பூணும்பூமியில் கெண்டைக்காலை புகல அகற்றியே வைக்கவேணும். 95

நாரியர்தங்கள் கணக்கிலிது நயந்துமாறுதச் செய்யவேணும் நேருடன்குறை தொழுகைசார் நீதியுடனிமாம்வருமளவும், சிருடனிமாம் ஜமாத்துக்கு சிறந்தவழிபார்த்துஇருக்கவேணும், கூறுமிதுவகை முஸ்த்தஹபைக்குறிப்பாயறியவே போதுமென்றார். 96

தக்கபொதுவுள்ள முபாஹதுவுஞ் சாற்றுமொன்பது முரைகுகிறேன், மிக்கமுகந்தனைத்திரும்பாமலேமிகவுங்கடைக்கண்ணால் பார்க்கவுமே, பிக்கொன்றணுகாமல் ஸஜ்தாத்தலம் பிசகியிருந்தாக்கால் சரியாய் நிற்க, சிக்கும்பாம்பு தேள்மிகவடிக்கசெப்புவ்வாய்தனைத் திறக்காமலே. 97

சந்தரபம்வந்தா லிமாமானவர் ஜமாத்தை கடைகண்ணாலே பார்க்கவும் செந்தாமரைகைபி லச்சத்துடன் சிறந்துயாதொன்றை வைக்காமலே, எந்தநபிலேயுந் தொழுது கொண்டாலிரண்டுதரமொருசூரத்தோத; வந்தமிடையன்றி A நபில்தொழுதால் வலியமதிலினில் சாய்ந்துகொண்டால். 98

மேவும்நபிலான தொழுகைக்குள்ளே மிகவுமுந்தின றக்காஅத்திலே, கூவுமொடுக்கத்தி லொருசூரத்தைக் குறித்துபிந்தின றக்காஅத்திலே, தாவியுரைத்திடு மொருசூரத்தை தலைப்பிலுரைத்திடப் பொதுவாகுமே, ஏவலுடனிந்த வொன்பதையுமிணங்கியறியவே போதுமென்றார், 99

A தங்கடம் நீங்கினவுடன்நபீல்தொழுபவர் மதிலில்சாய்ந்து கொண்டு தொழுகலாம்.

பன்னும்பதிநாலு A ஹறுமான்ஸதைப் பகரக்கேளுமே தொழு
கைக்குள்ளே, முன்னேபிசுமிலேவிரைந்துகூறி முடிவிலாமீனே
விரைந்தோதலும். வின்னமுடன்வல திடத்ஸதபார்க்க விழி
யால்வானத்தைத் தான்பார்க்கவும், குன்னுமிடையன்றிச் சா
ய்ந்துகொள்ளக் கோலமுடன்குந்தியிருப்பதுமே. 100

அடியுங்கரத்தையும் ருக்கூஉறிலே அலிங்கிசஜ்தாவில் கிளப்பு
வதும், வடிவின்கரமெடுக் காததலம் மேவியெடுக்கவு மிருசெய
லும், கடினமுடனத்த ஹிய்யாத்திலே B கலிமாவிரல்கொண்
டு இஷார்த்தானல், நடினவித்துரன்றி குனூத்தோதுதல் நய
ந்துவொருபுறஞ் சலாங்கொடுத்தல், 101

பாத்திஹாவுடன் கிராத்துரைக்கும் பகருமல்லாஹு அக்ப
ருக்கும். வேத்திருக்கூஉறிலே ஸஜ்தாவிலே விரும்பித்தசுபீ
ஹு உரைப்பதற்கு, சாற்றும் அகூதுடன் பிசுமிலுக்கும்
தனவுடனத்த ஹிய்யாத்துக்கும், ஏற்றமுடனிதுக் கதிகமா
க C யிதமாவோதலும் ஹறுமாகுமே. 102

A மக்ருஹுத்தஹரீம் B லா என்றயிடத்தில் விரல்டுத்து
இல் என்றயிடத்தில் வைக்கவேணும் தவறினல் ஹறுமெ
ன்று ஒருசொல்லிருக்கிறது C அதிகமாய் ஓதுவதும் சும்
மாயிருப்பதும் மக்ருஹுத்தஹரீம்.

•

விதிக்குமிருபத்தோர் வாஜிபிலே மேவியாதொன்றை விடச்செய்தாலும், பதினாலுஹறாந் தொழுகைக்குள்ளே பகர்ந்தேனறியுமே பண்புளோரே, இதமாய்த் தொழுகையில் பருலே விட்டாலிணங்குந்தொழுகையு முறியுமென்றார், பதமாம்வாஜிபை தர்குச்செய்தால் பண்புடன்வந்து ஹறுமடுக்கும். 103

உரைக்குந் தொழுகையி லேம்பதுடனென்பதின்மக்ரூஹுவுரைக்குகிறேன், சிறக்குந்தொழுகையில் தக்பீருகள் செப்பிமறுமட்டுத் திருப்பினாலும், நினைக்குந்தக்பீரு குரூணயத்தைநினைந்து விரல்கொண்டு எண்ணினாலும், A இருக்குமிடத்தில் கை யூண்டினாலும் இசைந்து மிடையன்றிச் சாய்ந்திட்டாலும். 104

வலியசிலேத்துமம் வரவழைத்து வருகுஞ்சுன்னத்தை விடச்செய்தாலும், நலியுமிசைவுடன் தன்செவிக்கு நயந்துகேட்கவே மூச்செறிந்தால், பளமைவாயிலே திரஹவைத்துப்பகர்ந்துயிதமின்றிக் கிருத்தோதலும், கலியவஸ்துக்கள் பல்லிக்டுகில் கவ்வியிருந்ததை விழுங்கினாலும். 105

நன்று ஸஜ்தாவிலிருமுழங்கால் நயந்துவைக்குமுன் கையைத்தாலும், கன்றுமிடையன்றி முழங்கால் ரண்டும் கையையெடுக்குமுன் னெடுத்திட்டாலும சென்றுநிலேயினில் கிராத்தோதுமுன் செய்யும்ருக்கூஹிலே சேர்ந்திட்டாலும், என்று

A மக்ரூஹு தன்வீஹ.

ரப்பனு லக்கல்ஹம்தென்று யியம்புஞ்சொல்லுடன் ஸஜ்தா ச்செய்தால். 106

பரிசையிருப்பினில் நாயிருப்பும் பாசமன்றியே வாய்மூடலும், தெரிசைவிழிதனை மூடிக்கொள்ளச் சிறந்தஉடைகுலேந்துடுத்துதலும், கரிசைவேர்வைடண் நெற்றியொட்டுங் கவுலுஞ் சலாத்துக்கு முன்துடைத்தல், வருசையிதமுள்ள ஸஜிதாவிலே மணியாமிருகையைத் தூராக்கினல். 107

நெட்டிமுறித்திடி லொருகாலின்மேல் நிலேயில் பாரத்தைச்சுமத்தினுலும், கொட்டாவிதனில்வாயதிரக்கூருமுடுகலா கிராத்தோதலும், சட்டமுடன்தலே முதுகுமேதான் சரியாய் குனிவதை விடச்செய்தாலுங், துஷ்டமிடையன்றி அடிகிளப்பித்துவளப்பிசகியே கசக்கிவைத்தல். 108

இடதுவலதிடம் வடலசைக்க எழும்பி வூர்கின்றபேனேக்கொல்ல, உடலின்வேர்வையைச் துடைத்தெரிய உகந்துபரிமளமுகர்ந்துகொள்ள, கொடுதாளிறுக்கிய மோசாவையுங் கொஞ்சச் செயல்கொண்டு தான்களற்ற, வடிவுமுந்தின தக்பீரன்றி A வசந்த ருக்கூஹிலே விரல்விரிக்க. 109

உன்னியிருசூரத் திடைதனிலே ஒடிக்கிவிடச்செய்தா லொருசூரத்தைப், பன்னுந்தொழுகையி லொருசூரத்தைப் பழக்கமாயதை திருப்பியோத, முன்னேபிசுமிலே சூரத்துக்கு

A மூந்தினதக்பீரிலும் ருக்கூஹிலுந்தவிர மற்றயிடத்தில்விரல் விரிப்பது மக்ருஹூ.

மொழியுமுரையன்றி வீசிக்கொள்ளல் விண்ணமிடையன்றிசிறு பிள்ளையை மேவியெடுக்கவு மக்ரூஹாமே. 110

மனிதர்வருகிறகாலின் சத்தம் வாய்ந்தருக்கூஹிலே கேட்டு யிமாம், இனிதாய்வருமட்டுந்தாமதிக்க யிதமாய்த்தூணிலே சாய்ந்துகொள்ளல், தனதாய் ஆயத்தின் பொருளையெண்ணி தாமதிப்புட னிருத்தியோதல், கனமாய்ப்பிந்தின றக்காஅத்தி லே கிருத்தை நீட்டியே தானோதலும். 111

தலைப்பாச்சுற்றிலே ஸஜ்தாசெய்ய சட்டமுழங்கையை யுயர்த்திக்கொள்ள, தரையில் முளங்கையைப்படுக்கப்போட சட்டையுடன்தொப்பி தான்கழற்ற, நிலையாய்த்தொழுகையி லிடஞ்சலாக நிகழ்த்துஞ்சூரத்தை நீழித்தோத, வலிய ஆண்பிள்ளை ஸஜ்தாவிலே வயிற்றைத்தொடைதனில் தொடுத்து வைக்க. 112

சுருக்கமாவோத யிமாமானவர் தொகுத்தமுக்ததி முடுகலுக்காய், உரைக்குந்தொழுகைகுப் போதுமட்டு ஓதிமுடிந்தபின் தாமதித்தல், விதிக்கும்பகலையில் நபில்தொழுதால் மிகுந்து சூரத்தை யிரைந்தோதலும், பெருக்கமுடனொரு ஆயத்தை யும் பேணித்திருப்பியே பறுவிலோதல். 113

மெள்ள அமர்ந்தோதுந் தொழுகைக்குள்ளே விளம்பிஸஜ்தாவுள் ளாயத்தையும், தெள்ளுமறிவுள்ள கிருத்தோதச்சே செப்புமுக்ததி சதக்கல்லாவென் றுள்ளுமிடையன்றி கையைத்தூக்கத் தொணியாய் நாசியை உறிஞ்சிக்கொள்ள, உள்ளு

ருக்கூஹுடன் ஸஜிதாசெய்ய உகக்தழுகந்தனே வானப்நோ க்க 114

இருப்புசமணத் துடனிருக்க எண்ணேமொரு மூன்று மக் ரூஹாமே, விருப்பமுளதுய்யு பறுலுவகை மேவும் வாஜிபு சுன்னத்தையும், நிரப்பமுளவகை முஸ்தஹபு நெடியதொழு கையில் பொதுமுபாஹும், வெருப்பாய் வருகிர ஹறும்மக் ரூஹு விளம்பினேனிதை யுறியுமென்றுர். 115

தொழுகைதனிலிரு பத்துநான்கு தொகுத்த முறித்தலுண் டதனைக்கேளும், வழுவிஅசலார்கள் நம் அபம்பார்க்கலும் வா யும்நிரைசத்தி தாடெடுக்கல், மொழியும்மாந்தர்க ளுடன்பே சுதல் முருவச்சிரிப்பது முறங்குவதும், தழுவியாதொரு A செயல்வலியத் தானேசெய்திடலச்செயலும். 116

B இளந்தைமாதர்களெதிர் நின்றுலும் C இஷ்கினுல் மணி வெளியானுலும், வலியபதினைந்து பறுலிலொன்றை வாய்ந் தமறதியால் விடச்செய்தாலும், தெளிவாய்த் தொழுகையி ல் இமாமுக்குமுன் சிறந்தமுந்தின தக்பீர்சொல்ல, விளங்கு மெய்யான எழுத்தைவிட்டு வேறே எழுத்தோடு ஓதினு லும். 117

A மிகுந்தசியல் B ஆண்களும், பெண்களும் நேர்நேராய் நின் று தொழுதல் C ஆசையினுல் மணி வெளியாகுதல்.

உடைகள் குறைந்துதான் மில்லாதவர் உகந்து தமக்குடைவ ரக்கண்டாலும், மிடையொன்றில்லாதோரிமாமை விட்டு மே வித்தனியேதான் A தொழுதுகொள்ள, கடினயிருமல் யேப்ப ங்கொட்டாவி கலந்துயெழுத்துடன் வெளியானாலும், கொடு மைசலிப்புடன் துனியாவுக்காய்க் கோவென்றழுதாலும் மு றித்தலாமே. 118

வேதநபியுல்லா நாமங்கேட்டு மேவிசலவாத்து ஓதினாலும், B சூதுகளவுபொய்ஹறும் ஜினாவைத்துணிந்து ஹலாலென் று எண்ணினாலும், ஓதும்பாத்திஹாகிருத்துக்கும் உகந்துபொ ருளதை மொழிந்திட்டாலும், வேதினையங்களுஞ் சொரிந்துமு க்கால் வெருண்டு தும்மலின் பிறத்திசொன்னால். 119

ஜலங்கள்தனையன்றி தயமஞ்செய்து தானே தொழுகையில் நீ ர்கண்டாலும, துலங்கும் பஜிர் தொழும் வேளையிலேதோ ன்றும் கதிர்வந்து உதித்திட்டாலும், இலங்குந்தொழுகையி லைந்துக்குள்ளே இசைந்துமனதிலே கலாநினைந்தால் மலங்கு முறிந்திடுந் தொழுகையென்று வகுத்தே னிருபத்துநான்கு மென்றார். 120

மாதம்றமலானின் வரிசைநோன்பு வைக்குமிருபறு லருளக் கேளும், ஓதும்நிய்யத்து நோம்புடனே ஊணுங்குடி சேர்க்

A இமாமுடன் சேர்ந்தவன் தங்கடமன்றி பிரிந்துதொழுகப்ப டாது. B காபிராய் போய்விட்டதினால் தொழுகைமுறிந்து விடும்,

கைவிடுவதுவும், வேதச்சருத்துகள் மூன்றதுகேள் விளங்கு மிசுலாம யிருக்கவேணும், தீதுஅணுகாத வயதெத்தின திருந்த ஹக்கலுள்ளோளுகவேணும். 121

சுன்னத்தஞ்சுகேள் நோன்புதனில் துலங்கும்ஷஹர்செய்து கொள்ளவேணும், மின்னத்தணுகாமல் திறப்பதுவும் விளங்குந்தராவிகு தொழுவதுவும், பின்னேவொருபத்து ஆகிரிலே பேணிஇருத்திக்கா பிருப்பதுவும் தின்னும்நாவிணைப்பேணுவதும் திருந்துநோன்பிலே சுன்னத்தென்றார். 122

பாரில்முஸ்தஹபாறதுகேள் பகரும் புறங்கோளு கேள்விஹும்; கூரும்படுதூருவிடுவதுவுங் குறித்துநற்செயல் செய்வதுடன், சேருமொதுவுடன் குருனையும் திக்ருதஸ்பீஹுவு தக்பீருடன், காரும்யாதொரு தோசிகளை கடுகமுடுகவு மாகாதென்றார். 123

வலியபக்ஷியைக்கொல்லாமலும் வசையாங்கருமங்கள் செய்யாமலும், வலியசண்டை போராடாமலும் சாற்றுங்கல்புவன்நெஞ் சாகாமலும். நிலையாந்திக்ரன்றி யிருப்பதுவை நினைந்து அனுதினம் விடாமலும், பொலிவாயிதுகளைப் பேணுவது பொருந்தும் நோன்பிலே முஸ்தஹபாம். 124

மக்ரூஹஞ்சுண்டு நோன்புதனில் மருவும்பொடிவாயிற் போடுவதும், ஷுக்ரு ஷஹர்செய்யாதிருப்பதுவும் துதிக்கும் A வாய்தனைகொப்பளிக்க, மகருபரிமள முகர்ந்துகொள்ள வலியத

A மக்ரூஹில்லையென்றுமிருக்கிறது.

லைமுக்ம் நீர்செலுத்த், பிக்ராகிணங்குளம் நீர்தனிலே பிளங்கி இஸ்திஞ்சா கழுவுதலும். 125

அஞ்சுஹறுமுண்டு நோன்புதனில் அடைவாயு ரைக்கிறேன் கேளுமினி, வஞ்சியுடனேதான் வரைமரைய வசந்துசேர்க்கைதான் செய்திட்டாலும், மிஞ்சிக்கைகொண்டு குறியைத் தொட்டு மேவிமணியதை வெளியாக்கினல், பெண்சாதியுடசுகம்பராட்ட பிரிய இஸ்குடன் சேர்ந்தாகிலும். 126

வஞ்சிதனைக்கட்டிப் பிடிப்பதுவும் வருகுஞ்சுகத்தண்ணீர் பிரியுமட்டும், மிஞ்சிச்சக்குடன் ஷஹர்செய்தாலுல் வெகுண்டுஷக்குடன் திரைக்கிலுமாம், வஞ்சமாகிய இவ்வகையால் வருகும்நோன்பினில் ஹறுமிதென்றார், நெஞ்சந்தனிவிதைத் தரிப்படுத்தி நினைவாய்விலகலைத் தவிர்ந்துகொள்வீர் 127

பத்துவகையுண்டு நோன்புதனில் பகருமுறித்தலைக் கேளுமினி, உத்தவொஜ்பனமுண்டாகிலும் உண்ணுந்தண்ணீர்தான் குடித்தாகிலும், பித்துக்கொண்டுதான் திரிந்தாகிலும் பெருகச் சேர்கையுஞ் செய்தாகிலும்; மெத்தவாயினீர் கொள்ளுமட்டு மேவிச்சத்திதா னெடுத்தாகிலும். 128

பிள்ளைபெறகிலும் ஹைலகாண்கிலும் பெறுகமுயல்கொண்டவலிப்பெடுத்தால், தள்ளுஞ்சுகத்துடன் தனைமறந்தால்தரிக்குந்துபுருலே வைப்புத்திரி, உள்ளேவைத்தாலும் எண்ணெய்யும் ஊணிமுக்கிலே செலுத்தினலும், விள்ளயீரைந்து வகையுங்கொண்டு விதிக்கும்நோன்பிலே முறிச்சலாமே 129

ஆறுவொன்றுட நோன்புதனில் அறியஹறுமதை யுரைக்கு கிறேன், கூறும் துல்ஹஜ்ஜு பதினென்றிலும் குறித்தபனி ரண்டு பதிமூன்றிலும், பேரும்பித்துரு அலுகாவிலும் பிற க்கும்றம்லானில் பிரைக்காணுமுன், தோநும்காபரு நோன் பன்றையில் துடர்ந்துபிடிக்கவும் ஹறுமாகுமே. 130

இந்தவகையெல்லா மறிந்தபடி யேகன்தனையஞ்சி வணங்கும் பேர்க்கு, சொந்தபிறையவன் தீதாருடன் சொர்க்கமுஹம்ம து ஷபாஹத்து வந்தபிணிகளும் தீங்குதீங்கும் வாள்வுதறஜா த்து இருபதியில், சிந்தைமகிழுவே இசுலாமிலே தீதுவருகா மலருள ஆமீன். 131

வேதநெறியோதும் பறுலுமாலை விளங்கும் சரிதையை மே தினியில், நீதமுடனே தான் பாடினோரும் நிறைந்த உகப் புடன் உரைசெய்தோரும், காதலுடனேதா னெழுதிநோரு ம் கவிதைதனிலுள்ள களங்கந்தீர்ந்தே, ஓதுமெனக்கேட்டு ம கிழ்ந்தபேரு முலகிலினிதூழிவாழ்க ஆமீன். 132

ஷரீஹத் துலக்கம் பிதஅத் விலக்கம் என்னும்

பறுலுமாலை.

முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்றஹீம்.

மாதம் பனிரண்டிலும் வரும் சிறியபெரிய கொடிய நகசுகளின் விபரம்.

சிறிய நகசு.

ஆண்டுபனிரண்டு திங்களிலும் அறியநகசுநா ளருளக்கேளு
ம். தூண்டுபிறைக்கண்டமூன்றில் ஆதம் சொர்க்கந்தனை விட்
டுப் பிரிந்தநாளாம், தாண்டும் ஐந்தினில் சுலைமான்நபி தகுத்
துப்பரிபட்டுப் போனநாளாம். பூண்டபதின்மூன்றில் இபுறு
ஹீமைப் பொரியும் நெருப்பினி லெரிந்தநாளாம். 1

நபிஅய்யூபுதான் பதினாறிலே நைந்துபிணிகொண்டு கிடந்த
நாளாம், ஆவிசூபு நபிகிணற்றில் அடைபட்டிருந்தநாள் இ
ருபத்தொன்றும், தாவிஜக்ரியா நபிமரத்தில் ஷஹீதானதிரு
பத்து நாலதிலாம், மேவும்முஹம்மது நபிபல்லொன்று மீ
ளாஷஹீதான திருபத்தஞ்சாம். 2

பெரிய நகசு.

மாதங்கள்தோறும் வரும்நகசில் வலிவநகசினை யருமக்கேளீர்
சேதமணுகாத முஹற்றமாதம் சிறந்தபதினாலு பதினைந்திலு
ம், நீதமணுகாத ஸபறொன்றிலும் நிற்குமதுநோா யிருபதி
லும், நாதனருளினால் றபீஉல்லவ்வல் நல்குமொருபத்து யிரு
பதிலும். 3

தக்காபீயுல்லாகிரிலே தற்கநகசொன்றில் பதினைந்திலும் மி
க்கபிறைகாணும் ஜமாத்துல்லவ்வல் மாதமொருபத்து பதினை
ந்திலும், துக்கொன்றணுகாத ஜமாத்துல்ஆகிர் தொடரும் நக
சொன்றில் பதினைந்திலும், ஒக்கும்றஜபுதான் பதின்மூன்றி
லும் உரைக்கும் பதினைந்தில் நகசாமென்றார். 4

பிறக்கும் ஷஃபானில் பதினாலிலும் பிசகா இருபதில் பிரியா மலே, நிறக்கும் ரம்லான் மூன்றதிலும் நிற்கு மதுனோயி ருபதிலும், சிறக்கும் ஷவ்வால்தான் இருநாலிலும் தேதி இ ருபதும் பிரியாமலே, சுரக்கும்துல்கஃதா இரண்டினிலும்சொ ல்லு மிருமூன்று நகசாகுமே. 5

ஓதும்ஹஜ்ஜுச்செய் துல்ஹஜ்ஜிலே ஓதுமோராறு மிருபது மே, ஏதும்துடங்காதே இந்தநாளில் நேர்ந்தஸபரையும் தடு த்திடாதே, மாதாகர்ப்பத்தில் தரித்திட்டாலும் மரித்துவிடு ம் என்று ஹலபர்சொன்னார், வேதாபர் சொன்னார் நல்மொ ழியை வேதத்தில்தீ தில்லாதது வே. 6

கொடிய நகசு.

நகசில்கொடியதைப் புவியில்கேளாய் நடக்குந்திங்களில் ஒவ் வொருநாள், முஹற்றம்றபீஉல் ஆகிரிலும் முன்நான்காகு மே சபர்மாதத்தில், நிகழ்த்தும் ஒடுக்கத்தின் புதன்வாரத் தை நெடியோன் நகசென்றான் குருனிலே, அஹமதிறசூல்ந பியின்மாதம் அருளும்றம்லானில் நாலாகுமே. 7

அவ்வல்ஜமாத்தினி லிருபத்தெட்டாம் ஆகிர்ஜமா த்திருப த்திரண்டாம், அவ்விதமாகும் றஜபிலேயும் ஐநான்சொரு மூ ன்றும் ஷஃபானிலே, ஷவ்வால்தனிலும் துல்ஹஜ்ஜிலும் சார்ந்தஏழதில் நகசாகுமே, நவிலுமிருபத்தி யேழதிலே ந டக்கும்துல்கஃதா நகசாமென்றார். 8

முற்றுப்பெற்றது.

நகசு காலத்தில் சுபகருமங்கள் செய்யப்படா தென்பதற்கு அத்தாக்ஷியில்லை.

விளம்பரம்.

இதனுல் சகல கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இந்த ஷரீஹத் துலக்கம் பிதஹத் விலக்கம் என்னும் பறுலுமாலே அவசியம் சிரியோர்முதல் பெரியோர் வரை யாவருக்கும் விளங்கும்படி சரியாகத்திருத்தி சுத்தப்பிரதியாய் அச்சிடப்பட்டிருந்து கனவான்களுடைய ஆர்டர் கிடைத்ததால் சீக்கிரம் செலவாகி விட்டபடியால் மூன்ரா முரை 50 பவுண்டு கிலேஸ் நல்ல கடிதத்தில் சுத்தமான எழுத்துகளைக்கொண்டு அச்சிடப்பட்டிருக்கிரது புத்தகம் 1-க்கு அணு 3. ஒரேமுரை 12 வாங்கினல் 2 புத்தகம் கமிஷன்கொடுக்கப்படும். 100 புத்தகம் வாங்கினல் முக்கால் கிரையப்படி கொடுக்கப்படும்.

இங்ஙனம்.

ஐ. மூ. முஹம்மது யாக்கூபு ஸாஹிபு.

முஹம்மதிய நேசன் பிரஸ், அண்டு

மணிப்பர்ஸ்பாக்டரி

பள்ளபட்டி.

கரூர் S. I. R.

முக்கிய கவனிப்பு.

இவ்வச்சியந்திரசாலையில், பலவித வர்ண மைகளாலும்; நிய எழுத்துகள் பார்டர்களாலும், விச்சத்திர பிளாக்குகளாலும், சீமை மெஷின்களைக்கொண்டு, பட்டா, முச்சலிக்கா, ரசீது, உண்டியல், பட்டியல், முதலிய அச்சிற் சம்மந்தப்பட்ட சகல வேலைகளும் குரிப்பு, பேரேடு, பட்டியல், முதலிய கடை வேளைகளும், சுத்தமாகவும், கெட்டியாகவும், குரிப்பிட்ட காலத்தில் செய்து தரக்கூடும்.

எங்கள் பனியன் பாக்டரியில், திக்கு, ஊஸ் பலரகநூல்களில் நாகரீகமான பலஸைஸ் பனியன்கள் தயாரித்துமொத்தமாகவும் சில்லரையாகவும் சரசமான விலைக்கு சப்ளைசெய்குறோம். சாம்பிலுக்கு எழுதுங்கள்.

இங்கனம்.

ஜ. மு. முஹம்மதுயாக்கூப் ஸாஹிபு

முஹம்மதிய நேசன் பிரஸ், & பனியன் பாக்டரி

பள்ளபட்டி. கரூர் வழி.